## கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு:

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் கலை நிகழ்ச்சிகள்

## நாளை தொடங்குகிறது

சென்னை, நவ.6–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில்களில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டு உள்ளது. அதன்படி நாளை (சனிக்கிழமை) மாலை $6\frac{1}{2}$ மணி முதல் இரவு $8\frac{1}{2}$ மணி வரை விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தில் கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

தொடர்ந்து 8–ந்தேதி காலை 10 மணி முதல் 11 மணி வரை திருமங்கலம் மெட்ரோ, 21–ந்தேதி மாலை $6\frac{1}{2}$ மணி முதல் $8\frac{1}{2}$ மணி வரை மீனம்பாக்கம் மெட்ரோ, 22–ந்தேதி காலை 10 மணி முதல் 11 மணி வரை ஐகோர்ட்டு மெட்ரோ ரெயில் நிலையத்தில் நடத்தப்படுகிறது.

டிசம்பர் 6–ந்தேதி மாலை $6\frac{1}{2}$ மணி முதல் இரவு $8\frac{1}{2}$ மணி வரை ஆலந்தூர் மெட்ரோ, 14–ந்தேதி காலை 10 மணி முதல் 11 மணி வரை கோயம்பேடு மெட்ரோ, 21–ந்தேதி மாலை $6\frac{1}{2}$ மணி முதல் $8\frac{1}{2}$ மணி வரை சென்டிரல் மெட்ரோ, 25–ந்தேதி பகல் 12 மணி முதல் 1 மணி வரை வண்ணாரப்பேட்டை மெட்ரோ, 27–ந்தேதி மாலை $6\frac{1}{2}$ மணி முதல் $8\frac{1}{2}$ மணி வரை திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

பின்னர் ஜனவரி மாதம் 1–ந்தேதி மாலை $6\frac{1}{2}$ மணி முதல் $8\frac{1}{2}$ மணி வரை விமான நிலைய மெட்ரோ, 3–ந்தேதி மாலை $6\frac{1}{2}$ மணி முதல் $8\frac{1}{2}$ மணி வரை திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்திலும் கலை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.